உ
சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரணஹ சித்திரை மீ அஉ (1944 ஏப்ரல்மீ 20 வியாழக்கிழமை) [இல. ச.

## இம்பால் சமவெளியிற் போர்

### சத்துருவிற்குப் பெருஞ்சேதம்.

போர்முனையில் மௌண்ட் பேட்டன் பிரபு.

அஸ்ஸாம் போர்முனை, ஏப். 15
இன்று வெளியான "சியாக்" அறிக்கையின்படி இம்பால் சமவெளியில் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதென்று அசோசியேடெட் பிரஸின் நிருபர் டாக்டர் மாலெனகர் எழுதுகிறார். அவர் மேலும் எழுதுவதாவது:—

700 சதுரமைல் விஸ்தீரணமுள்ள இம்பால் சமவெளியின் வடபாகத்திலும் வடகிழக்குப் பாகத்திலும் குன்றுகள் பல இருக்கின்றன. இங்கு ஜப்பானியர் குன்றின்பின் குன்றாக முன்னேறி வருகின்றனர். இக்குன்றுகள் வழியாக முன்னேறவே ஜப்பானியர் சென்ற இரண்டு வாரங்களாகக் கடும்போர் நடத்தி வந்திருக்கின்றனர்.

சிலவிடங்களில் ஜப்பானியர் இம்பாலுக்கு எட்டுமைல் தூரத்தில் இருக்கின்றனர். சமவெளிக்கு 5 மைல் தூரத்திலுள்ள 5000 அடி உயரமுள்ள குன்றின்மீது ஜப்பானியர் இருக்கின்றனர். சில்லறைச் சண்டைகளிற் சத்துருவிற்குக் கடுஞ்சேதம் விளைவிக்கப்படுகிறது.

### நேச அறிக்கை

இலங்கை பொதுஜனத் தொடர்பு இலாகா அதிகாரி மூலம் விடுவிக்கப்பட்டுள்ள தென்கிழக்கு ஆசியா இராணுவ அதிகாரபீட அறிக்கை கூறுவதாவது:—

இம்பால் அரங்கம்:— இம்பால் சமவெளிக்கு வடகிழக்கிலுள்ள ஒரு பிரதானமான குன்றை நமது படைகள் இன்று கைப்பற்றின. இதற்குச் சென்ற சில தினங்களாகக் கடுமையானசண்டை நடந்தது. இம்பால் சமவெளி பூரணமாக நம வசத்தில்தானிருக்கிறது. அதன அருகிலுள்ள குன்றுகளிலிருக்கும் ஜப்பானியர்மீது நமது படைகள் தொடர்ந்து வலுத்தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கின்றன. 13ந் திகதி இரவு கொஹிமாவின் கிழக்கிலும் மேற்கிலும் ஜப்பானியர் நடத்திய தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன. கொஹிமா திமாபூர் பாதையிலுள்ள எதிரிகளை ஒழிக்கும் நடவடிக்கை தொடர்ந்து நடந்து வருகிறது.

### அரக்கான் அரங்கம்

சென்ற 5ந் திகதி இந்த அரங்கத்தில் பிரதானமாறுதல் எதுவுமில்லை. புதிடாங்கிற்கு மேற்கிலுள்ள சில இடங்களை நமது படைகள் வெற்றிகரமாகத் தாக்கிக் கைப்பற்றின. டிடிம் பாதையினருகிற் பல எதிரித் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன.

### இம்பாலில்மௌண்ட்பேட்டன்பிரபு

அ. பி. யுத்தநிருபர் டாக்டர் மன்கேகர் ஏப்ரல் 8ந் திகதியன்று எழுதுவதாவது:—

தென்கிழக்கு ஆசியா இராணுவத்தின் சேனாதிபதி அட்மிரல் லோர்ட் லூயி மௌண்ட் பேட்டன் இன்று (ஏப்ரல் 8ந் தேதி) திடீரென்று இம்பால் போர்முனைக்கு விஜயஞ் செய்தார். இவர் இராணுவ காரியாலயத்தின் படிகளில் ஏறிக் கொண்டிருக்கையில் (பிற்பகல் 3-30 மணி) ஒரு நிருபர் இவரைப் பார்த்துவிட்டார். உடனே எல்லா நிருபர்களும் இங்கு கூடிவிட்டனர். அங்குள்ள சேனாதிபதியுடன் ஏறக்குறைய அரைமணி நேரம் லோர்ட் மௌண்ட் பேட்டன் இந்தப் போர்முனையிலுள்ள நிலைமை பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

வெளியே வந்தபோது நிருபர்கள் இவரைச் சந்தித்தனர்.

தங்கள் தகவல்களைத் தந்திமூலம் தமது இடத்துக்கு அனுப்புவதில் தாம் கஷ்டப்படுகிறோமென்றும் இந்தச் சிரமத்தைத் தாங்கள் அனுபவிக்கவேண்டியிருக்கிறதென்றும் நிருபர்கள் கூறினர். இவ்விஷயத்தை அனுதாபத்துடன் கவனிப்பதாக லோர்ட் மௌண்ட் பேட்டன் கூறினார்.

பிறகு 17வது இந்திய டிவிஷனின் காரியாலயத்துக்கு லோர்ட் லூயி மௌண்ட் பேட்டன் சென்றார். அந்த டிவிஷன் சேனாபதி மேஜர் ஜெனரல் டி. டி. கோவானைக் கண்டார். 17வது இந்திய டிவிஷனைப் பாராட்டி லோர்ட் லூயி மௌண்ட் பேட்டன் பேசுகையில் போர்களில அவர்கள் திரும்பி வந்ததற்குப் பாராட்டி அவர்கள் இந்த யுத்தத் தலேயே சிறந்த போர்களில் ஒன்றை நடத்தி திரும்பி வந்ததாகக் கூறினர். இப்பொழுது நேசப்படை கை மேலோங்கியிருக்கிறதென்றும் இந்த மாதிரி எப்போதுமே ஓங்கியகையாக இருக்க வேண்டுமென்றும் கூறினர். இந்த மாதிரி ஒரு கூர்க் கப் பட்டாளத்தின கட்டிடத்திலும் இவர் பிரசங்கஞ் செய்தார்.

## மதுரையில் திருவள்ளுவர் கோவில்

சோமசுந்தர பாரதியார் திறந்து வைத்தார்

மதுரை ஏப் 12—
இன்றிரவு மொட்டைக்கோபுரத் தெருவிலுள்ள வேம்படி விடுதிச் சைவர்கள் ஹோட்டலிற் சோமசுந்தர பாரதியார் தலைமையில் திருவள்ளுவர் கோயில் திறந்து வைக்கப்பட்டது. க. வேந்தனார் சமயக் கட்டல் தமிழர்படும் அல்லலை விவரித்து விரிவுரை நிகழ்த்தித் திருவள்ளுவர் பாண்பினை விளக்கினார். நூற்றுக்கணக்கான மக்கள் கேட்டு ஆனந்தித்தனர்.

'தந்தி' உதவியாசிரியர் திரு. மு. இராமலிங்கம் நன்றிகூறியதும் அ. முத்துச்சாமிப்புலவர் தமிழ் வாழ்த்தும் பள்ளியெழுச்சியும் பாடினர்.

## காந்திஜிக்கு மலேரியா

தேகநிலை திருப்திகரமாக இருக்கிறதாம்

பம்பாய் ஏப் 16—
பம்பாய் அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்று கூறுவதாவது:—

சென்ற மூன்று நாட்களாகக் காந்திஜி மலேரியாவினாற் கஷ்டப்படுகிறார். அவர் பலவீனமாக இருக்கிறார். ஆனல் அவருடைய பொதுத் தேகநிலைமை திருப்திகரமாக இருக்கிறது.

## ஜப்பானின் எதிர்ப்பதில் இலங்கையின் பிரதான பங்கு

தென்கிழக்காசிய இராணுவ பீடத்தின் பிரதம சேனாதிபதியான லூயி மௌண்ட் பேட்டன் பிரபு ஜி. வி. வி. ஓ. டி. எஸ். ஓ. சென்ற சனிக்கிழமை மாலை விமானமூலம் இலங்கைக்கு வந்து சேர்ந்தார்.

தென்னை மரங்களாற் சூழப்பட்ட ஒரு விமான நிலையத்தில் அவர் வந்திறங்கியபோது இலங்கையின் பிரதம தளகர்த்தர், கிழக்குக் கடற்படையின் தளகர்த்தர் அட்மிரல் ஜேம்ஸ் ஸொமர்வில்லி, லெப்டினன்ட் ஜெனரல். எச். ஈ. டீ. ஆர். விதரால், விமானப்படையின் உதவித் தளகர்த்தர் ஏ. டேர்ஸன் ரேயர் அட்மிரல் ஆர். எஸ். ஜி. நிக்கொலசன் ஆகியோரும் இன்னும் பல உயர்தர அதிகாரிகளும் அவரை வரவேற்றனர்.

டில்லியிலிருந்து பிரதம சேனாதிபதி தமது புதிய தலைமைக் காரியாலயம் நிறுவப்பட்டிருக்கும் இலங்கைக்கு விமான மூலம் பிரயாணஞ் செய்தபோதிலும் அவர் சுறுசுறுப்பாகவும் உற்சாகத்தோடும் காணப்பட்டாரே யன்றிக் களைப்படைந்தவராகக் காணப்படவில்லை. வரவேற்புக்களெல்லாம் நடைபெற்ற பிறகு அவர் அட்மிரல் ஸொமர்வில்லி ஆகிய இருவருக்கும் தாம் பிரயாணஞ் செய்த பிரிட்டிஷ் போக்குவரத்து விமானத்தைக் காண்பித்தார்.

அட்மிரல் மௌண்ட் பேட்டன் பிரபு இங்கு வந்து சேர்ந்தது, சனிக்கிழமை காலைப் பத்திரிகைகளில் 8-ந் திகதி அவர் இம்பாலுக்கு விஜயஞ் செய்ததாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. விமான நிலயத்தில் அவர் சனிக்கிழமை வந்திறங்கிய பின், பிரிட்டிஷ் அமெரிக்க டச்சு சீனக் கொடிகள் பொருத்தப்பட்ட அவரது சொந்த 'மோட்டா'ரில் அவரும் அட்மிரல லேட்டனும் ஏறிக்கொண்டு விமான நிலயத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றனர். தென்கிழக்காசிய இராணுவபீட நடவடிக்கைகளில இந்த நான்கு நாட்டுப் படைகளுந்தான் பங்கெடுத்துக்கொள்ள விருப்பதால் அவரது மோட்டரில நான்கு தேசக் கொடிகளும் பொருத்தப்பட்டிருக்கிற தென பதி கண்டு குறிப்பிடத்தக்கது.

### எவ்வித மாற்றமு மில்லை

நேசதேசப் பிரதம சேனாதிபதி இங்கு வீற்றதனல் இலங்கையின் ஸிவில் இராணுவ விவகாரங்களில் எவ்விதமாற்றமும் ஏற்படமாட்டாது.

தென்கிழக்காசிய இராணுவ பீடத்தின் பிரதம சேனாதிபதி யென்ற முறையில் மௌண்ட் பேட்டன் பிரபு நேசதேச வலுத்தாக்குதல் திட்டத்துக்குப் பொறுப்பாளியாக இருப்பார். தேசாதிபதியும் நானும் எப்போதும் போலவே இலங்கையின் யுத்த முயற்சிக்கும் இதேயின பாதுகாப்புக்கும் பொறுப்பாளிபாக இருப்போம். நம்மை என்ன தியாகஞ் செய்யும்படி நேசதேசப் பிரதம சேனாதிபதி கேட்கிறாரோ அதனை அக்ஷணமே நிறைவேற்றி வைக்க வேண்டியது நமது கடமையாகும். ஸிவில் அதிகாரிகள் முன்போலவே இக்க விஷயத்தில் ஒத்துழைப்பார்களென்று நான் நம்புகிறேன்.

### யுத்த அரங்கத்துக்குக் கிட்டிய இடம்

"பிரதம சேனாதிபதியின் தலைமைக் காரியாலயத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையின்படி இலங்கை தென்கிழக்காசிய அரங்கத்துக்கு மிகக் கிட்டிய இடமாக இருக்கிறது. காரியாலயம் இங்கு மாறினது, ஜப்பானுக் கெதிராக எடுக்கப்படும் பிரமாண்டமான ஒரு வலுத்தாக்குதலில் மற்றொரு படியாகும். ஆயினும் நாம் எந்த விஷயத்திலும் அசட்டு நம்பிக்கை கொள்ளாதிருக்க வேண்டும்."

இந்தச் சந்தர்ப்பத்தில் ஐரோப்பாவில நேச தேசங்கள் முழுமூச்சாக மற்றொரு முயற்சி செய்துவருகிறார்கள். அங்கு படிப்படியாக நடவடிக்கைகள் அதிகரித்துவரும். கிழக்கு யுத்தம் மிக நீண்ட காலத்துக்கு நடக்குமாதலால், யுத்தக் களைப்புக் கஷ்டமும் அதிகரிக்காதபடி நாம் அவசியமான நடவடிக்கைகளெல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

### "பிளாக் அவுட்" தொடர்ந்து இருக்கும்

சென்ற இரண்டு வருடங்களாக இருந்து வந்த கட்டுப்பாடுகளும் கஷ்டங்களும் தொடர்ந்து இருந்து வருமாதலால் அவற்றைக் கீழ்ப்படிவோடும் மனமகிழ்ச்சியோடும் ஏற்றுக்கொள்ளுமாறு நான் இலங்கை மக்களைக் கேட்டுக் கொள்கிறேன். யுத்த களத்தின் முன்னணியிலிருப்பதால் இங்கு 'பிளாக் அவுட்' தொடர்ந்து இருந்து வரும் வீதிகளிற் போக்கு வரத்துக் கஷ்டம் தொடர்ந்து இருக்கும். ஒரு பெரிய இராணுவத்தைக் கொண்ட நடவடிக்கைத் தளத்தில் இவையெல்லாம் சகஜமேயாகும்.

பர்மா திரும்பப் பிடிபடும்வரை நமது அரிசிப் பங்கீடும் இப்போதிருப்பது போலவே போதாததாகவே இருந்துவரும். கப்பல் வசதி

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## சைவபரிபாலனசபை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில் நேற்று சபைநிலையத்தில் "திருநாவுக்கரசுநாயனார் குருபூசை" வழக்கம்போல் சிறப்புற நடைபெற்றது.

தாரண வருடப்பிறப்பிலன்று யாழ்ப்பாணம் மறியற்சாலையிற் சைவச் சிறையாளர் பொருட்டு வழிபாடும் பிரசங்கமும் நடத்தப்பெற்றன. திருப்புகழ் வி. சுப்பிரமணியம் அவர்களால 'மனிதப்பிறவியின் வாழ்க்கைப் பயன்' என்னும் பொருள்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. திரு. சின்னையா உபாத்தியாயரவர்களால் நன்றி கூறப்பட்டது. சிறைபாளர்களுக்கெல்லாம் பிரசாதம் முதலியன விசேஷமாக வழங்கப்பட்டன. இக்கொண்டாட்டத்துக்காகப் பணமுதவியவர்களின் பெயர்களுந் தொகையுஞ் செலவும் பிறவும் பின்னர் வெளியிடப்படுமெனக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஹ
சித்திரைமீ அஉ வியாழக்கிழமை

## புதுவருட சோபனம்

"உலகம் ஆக்கலும் காக்கலும்
உண்மையால்
இலகநீக்கலும் என்றுந்
தவிர்கிலார்
சலச வாண்மலர்த் தாள்கள்
எந்நெஞ்சினும்
நிலவு சென்னி யினும்
நிலையாமரோ"

உயிர்கண்மீது கொண்டுள்ள திருவருள் காரணமாகப் பஞ்ச கிருத்தியஞ் செய்தருளும் இறைவனுடைய பாதாரவிந்தங்களைச் சென்னியிற் கொண்டு வணங்கித் தியானித்து வாயார வாழ்த்தி அவனது இன்னருளே துணையாக இப்புது வருட சோபனஞ் சொல்ல முயன்றேம். இந்தத் தாரண வருடத்தின் ஆரம்பத்தில் மங்கலத்திற்குரிய சோபனஞ் சொல்லுதற்காகிய அறிகுறிக ளில்லையாயினும், சொல்ல வேண்டுமென்ற நியதிபற்றிச் சோபனஞ் சொல்லத் துணிந்தேம்; வேதாகமமுணர்ந்து அவற்றின்படி ஒழுகும் வேதியரின ஆசி பெற்றுத் தத்தம வருணாச்சிரமங்களிற்குத் தக வொழுகும் அரசர் வணிகர் வேளாளர் முதலானோர்க்குப் புதுவருட சோபனம் புகலுகின்றேம். உலகம் எவ்வகையான குறைகளுமின்றி இனிது நடத்தற்குக் காரணர்களாய் விளங்குங் கற்புடை மகளிர்க்கு விசேட சோபனம விளம்புகின்றேம்; சந்மார்க்கமாகிய சைவ மார்க்கம் ஓங்கி நிலவும் வண்ணம் பல வழியாலும இடையறாது உழைத்துவரும் சமயாபிமானிகளாயுள்ளா ரெல்லார்க்கும் ஆரோக்கிய காத்திரத்தையும் நீடித்த ஆயுளையும வழங்கும் வண்ணம் இறைவனை மனப்பூர்வமாக வேண்டிக் கொள்கின்றேம். இன்னும் நம் சாதி தேசம் பாஷை யென்னுமிவைகள் விருத்தியாகும் வண்ணம் தங்கள் தங்களால் இயன்ற வரையில் இடையறாது உழைத்து வருபவர்கள் எவர்களோ அவர்கட் கெல்லாம் புதுவருட சோபனம் இயம்புகின்றேம். இப்பத்திரிகைப் பிரசுரங்கள் வாயிலாகச் சைவ சமயத்தின் பொருட்டும தமிழ் மொழியின் பொருட்டும் தமிழ மக்களின் பொருட்டும நல்லும் வகையால் உழைத்துவருகின்றவர்களாகிய யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார், இந்துசாத னாலயத்திலும் சைவப்பிரகாச யந்திரசாலையிலும் அபிமானத்தோடு கருமமாற்றி வருபவர்களாகிய அன்பாகளை வருக்கும சோபனம நன்கு நவிலுகின்றேம. பொருள் முட்டு முதலிய தீமைகள் அதிகப்பட்ட இக்காலத்திலே தம் பொருட் செலவு சிரமமென்னு மிவைகளை யிட்டுச் சிந்தியாது இப்பத்திரிகைகளை அபிமானித்து ஏற்றுப் படித்து வருபவர்களாகிய அபிமானிகளுக்கும். இப்பத்திரிகைத் தாபனம் பொருண் முட்டின்றி இனிது நடைபெறும் வண்ணம் இடையிடையே பொருளுதவி செய்து ஊக்கிவரும் அன்பர்கட்கும விளம்பரங்களைக் காலங் கோறும் உதவியும், தாங்கள் அச்சிடுவிக்க வேண்டியவற்றை இங்கே தந்து அச்சிடுவித்தும இத்தரும தாபனத்தை ஊக்கப்படுத்திவரும அபிமானிகட்கும் மனமார்ந்த சோபனஞ் சொல்லுகின்றேம, இன்னும் நல்லாரெவரோ அவருக்கெல்லாம் சோபனம பகருகின்றேம.

இந்தக் கொடிய யுத்தமும், இதனால் நேர்ந்துள்ள பஞ்சம் நெல் பிரிவு முதலாங் கஷ்டங்களும் விரைவில் ஒழிந்து போக, உலகம் பழைய சமாதான நிலைமையை அடைய, அதனால் தெய்வத்திறகு நடைபெற வேண்டியனவாகிய நித்திய நைமித்திகங்களும தெய்வ வழிபாடும தொலலைபோல நிலை பெற அருள் செய்யும வண்ணம கருணாநிதியாகிய இறைவனுடைய பூரண அநுக்கிரகத்தை யாசிக்கின்றேம.

---

### வாக்கிய பஞ்சாங்கம்

பருத்தித்துறை, பிரமஸ்ரீ. ச. சுப்பிரமணிய சாஸ்திரிகளாற் கணித்து அவருடைய சகோதரர் பிரமஸ்ரீ. சோமசுந்தர ஐயரால தமது கலாநிதி யந்திரசாலையில அச்சிட்டு வெளிவந்த தாரண வருட வாக்கிய பஞ்சாங்கம் வரப்பெற்றேம். பிரதிகள் தெளிவான அட்சரங்களில் நன்கு அச்சிடப்பெற்றுள்ளன. பொதுவிஷயங்கள் முந்திய வருடங்களிலுள்ள பஞ்சாங்கங்களில வெளிவந்துள்ளன. ஆதலின், அப்பொது விஷயங்களைத் தவிர்த்து இந்த வருடத்திறகாகிய விஷயங்கள் கிரமமாகக் கணித்து வெளியிடப்பட்டுள்ளன. மேலும் பிரதியொன்று 50 சதமாக விலையிடப்பட்டுளளது. பிறவூர்களி லுள்ளவர்கள் 60 சதமாகப் பெறறுக்கொள்ளலாம்.

### திருக்கணித பஞ்சாங்கம்

நிகழும் தாரணவருடத்திற்காகிய திருக்கணித பஞ்சாங்கம், யாழ்ப்பாணம் மட்டுவில், பிரமஸ்ரீ. சி. சுப்பிரமணிய ஐயரவர்களாற் கணித்துத் தமது சோதிட ரத்நாகர யந்திரசாலையில் அச்சிடப்பெற்று வெளிவந்துளளது. பிரதிகள் நன்கு அச்சிடப்பட்டுள்ளன. இது 57ம் வருடப் பதிப்பாகும் விலை ரூபா ஒன்று. பிறவூர்களிலுள்ளோர்க்குத் "தபாற்" செலவுஞ் சேர்த்து ஒன்றேகால் ரூபாவாக விதிக்கப்பட்டுள்ளது.

இப்பஞ்சாங்கங்களின் பிரதிகளை எமது பார்வைக்கு உதவிய கணிதர்கட்கு நன்றி கூறுகின்றேம்.

---

### கம்பன் திருநாள் விழா

வண்ணார்பண்ணை வடமேற்கு விசுவலிங்கப்பிள்ளையார் கோவில் வீதியிலுள்ள கணேசானந்த வாசிகசாலை முன்றிலில் இம்மாதம் 7-4-44 வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் டாக்டர் S. பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் இவ்விழா கொண்டாடப்பட்டது. அவ்வமயம் திரு. வ. குமாரசாமி ஆசிரியரவர்கள் 'கம்பன் சரித்திரம்' என்பது பொருள்பற்றியும் திரு. [illegible] தன் ஆசிரியரவர்கள் (குரும்பைசட்டி) 'சூர்ப்பனகையின் காதல்' என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

சுடித—

# உலகம்பலவிதச் சிறுகதை

[ஒரு ஆங்கிலப் பத்திரிகையிலுள்ள கதையை ஆதாரமாகக்கொண்டு எழுதியது]

(முற்றொடர்.)

### நல்ல குணமுடையவர்

இவை நிகழ்ந்து அறுமாசங்கள் வரையிற் கழிந்துவிட்டன; சுகுணாம்பிகை தனது அறையில் ஒரு 'ஸோபா'வின்மேற் சாய்ந்திருந்தபடி ஏதோ ஒரு தமிழ்ப் பத்திரிகையைப் படிக்குஞ் சமயத்தில், அவளுடைய கணவன் வீட்டிற்கு மீண்டு வருதலும், தன் நாயகன் வரவைக்கண்ட அவள் இருக்கைவிட்டெழுந்து அவனை இருக்கச் செய்து பக்கலில் விநயமாக நிற்றலும், அவன் அவளை அன்புடன் பார்த்து "சுகுணா, கடவுள் கிருபையால் இந்தப்பட்டினத்தில் வந்து நான்செய்யத்தொடங்கியபுதிய முயற்சி ஒரு அளவிற்கு விருத்தியடைந்து வருகிறது; இந்த ஊரின் சுவாத்தியமும் எங்களிருவருக்கும் ஒத்துப்போகின்றது; சுகுணா, உனக்குச் சொல்ல மறந்துவிட்டேன்; என் முயற்சிக்கு உதவியாளாக ஒருவரை இப்பொழுது நியமித்திருக்கிறேன்; ஒழுக்கமான சீரிய குணம் நடையுடைய ஒரு வாலிபர்; அப்படிப்பட்ட ஒருவரை உதவியாகத் தேடுவது அரிது; ஏதோ, எங்களுடைய அதிர்ஷ்டந்தான அவர் இந்தச் சமயத்தில் எங்களுக்குக் கிடைத்தது; என்னிடத்தில விசுவாசமாக நடந்து வருகிறார்; இங்கே இப்பொழுது அவரையும உடன் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன்; தலைவாசலில் வந்திருக்கிறார்; என்னுடன் தலைவாசற்பக்கம் வா, அவரை உனக்கு அறிமுகப்படுத்திவிடுகிறேன்" என்று சொல்லிச் சுகுணாம்பிகையையுங் கூட்டிக்கொண்டு தலைவாசற்பக்கம் போதலும், அவர்கள் வரவைக்கண்ட அந்த வாலிபன் உடனே தானிருந்த நாற்காலியை விட்டெழுந்து "அம்மா, நமஸ்காரம்" என்று சொல்லி விநயமாக நின்றான்; நின்ற வாலிபனுக்குச் சுகுணாம்பிகையும பிரதிநமஸ்காரம செய்து, இருக்கச் சொல்லுதலும் "ஆம், அம்மா, இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு நாற்காலியின பிற்புறத்துள்ள சட்டத்திற் பிடித்தபடி முகங்கவிழ நின்றான. சுகுணத்தின கணவன தானும இருந்துகொண்டு, தன மனைவியை அன்னுமொரு நாற்காலியில இருக்கப் பணித்துவிட்டு, அவனையும் இருக்குமபடி சொல்ல, அவன தானிருந்த நாற்காலியை ஒரு மூலைப்பக்கமாகச் சிறிது இழுத்து ஒதுங்கியிருந்தான்; "சுகுணா, இவர்தாம எனது வியாபார சமுதாயத்திற் புதிதாக வந்து சேர்ந்தவர்; வெகு நேர்மையானவர்; நல்ல குணமுடையவர், பெரியஇடத்திற் பிள்ளைபோற காணப்படுகின்றார்" என்று மகிழ்ச்சியோடு சொல்ல அந்த வாலிபன் நிலத்தைப் பார்த்தபடி இருந்தான்; "அவரைப் பார்க்க அப்படித்தான் இருக்கிறது" என்று முகமலர்ச்சியோடு சொன்னாள் சுகுணம. இதற்கிடையிற் சுகுணாம்பிகை உள்ளே சென்று ஆகாரத்திற்காகிய சில பண்டங்களைத் தங்கள் வேலைக்காரச் சிறுமி வாயிலாகத் தருவித்துத் தலைவாசலிற்கு அணித்தாகவுள்ள அறையில வைக்கச் செய்துவிட்டு, நாயகனிடம்வந்து ஏதோ மெல்லச் சொல்ல அவன "சேதுராம, வருகிறீர் உள்ளே சென்று சிறுண்டி யருந்துவோம" என்றழைக்க "ஆம், வருகிறேன்" என்று எழுந்து தன் எஜமானன்பின் சென்றார்: சுகுணா பரிமாற இருவரும் சிற்றுண்டியருந்திவிட்டு மீண்டு தலைவாசற்பக்கம் வந்து இருந்தனர். கணவன் மனைவியை விளித்து, "சுகுணா ஏதோ சேலை துணிவாங்கவேண்டுமென்று சொன்னாயல்லவா, எனக்கு இப்பொழுது நேரமில்லை, எங்கள் இரதத்திலேறி இவரையும் உடன்கூட்டிக்கொண்டு புடைவைக் கடைக்குச் சென்று ஆகவேண்டிய சேலைதுணிகளை வாங்கிக்கொண்டு வா" எனச் சொல்லிவிட்டு, தங்கள் சாரதியைக் கூப்பிட்டு ரதத்தைச் சித்தப்படுத்திக்கொண்டுவரச் சொல்லுதலும், அவன் அப்படியே கொண்டுவந்து புறங்கடையில் நிறுத்தினான; சாரதியுடன் சேதுராமன முன்னாசனத்திலிருக்க, பின்னாசனத்திலே சுகுணாம்பிகை ஏறியிருந்தாள்; இரதம புறப்பட்டுக் கடைப் பக்கமாகச் சென்றது. புடைவைக் கடையின்முன இரதம நிறுத்தப்பட, சுகுணாம்பிகை இறங்கி முன் செல்ல, எஜமானனைப்பிறகே வளர்த்தநாய் போவதுபோல, அவளைப் பிறகே சேதுராமன சென்றான். சுகுணமே சேலை துணிகளைத் தெரிந்தெடுத்துவிலைதீர்த்து வாங்கிக்கொடுக்க, சேதுராமன அவைகளைக் கொண்டுபோய் இரதத்தில வைத்தான; மேலும கடைகளில் வாங்க வேண்டிய வேறு பண்டங்களைப் போயப்போயச் சுகுணாம்பிகை விலைதீர்த்து வாங்கக் கொடுக்கப் பின்தொடர்ந்து போனவனாகிய சேதுராமன இரு கரங்களாலும பணிவுடன அந்தப் பண்டங்களை வாங்கி வாங்கிக்கொண்டு வந்து இரதத்தில வைத்தான.

### "தங்கையென நினைத்து நடவும்"

வாங்கவேண்டியபண்டங்களையெல்லாம வாங்கிக்கொண்டுசுகுணம்ரதத்தில்வந்து ஏறுதலும் சேதுராமனும்பழையபடிஇரதத்திலேறி முன்னிருந்தபடியே இருந்தான். சிலநிமிஷ நேரத்தில் இரதம மீண்டு வீடுவந்து சேர்ந்தது: சுகுணம் இறங்கி வீட்டுட்செல்ல, சேதுராமனும் இறங்கி அங்கே கொண்டுவந்த பொருள்களையெல்லாம் இரதத்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய்த் தலைவாசலில் வைத்துவிட்டு ஒருபுறத்தே நின்றான்; அந்த நேரத்தில் சுகுணத்தின் கணவன வீட்டிலில்லை; அயலிலெங்கோசென்றிருந்தான, சாரதி இரதத்தைக் கொண்டுபோய்க் கொட்டிலில் விட்டுப் போய் விட்டான்; சுகுணமும் வேலைக்காரியும் தலைவாசலில வைக்கப்பட்ட பொருள்களை வீட்டினுட் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். சேதுராமன் தலைவாசலிலேயே நின்றான; சேலை துணிகளை வைத்தபின சுகுணம் தலைவாசலில வந்து "ஏனிங்கு நின்றீர்! இப்படி இருக்கலாமே, ஐயா உடனே வந்துவிடுவார்" என்று சொல்லிவிட்டு அவன முகத்தைப் பார்த்தபோது அவன் கண்களில் நீர் தாரைதாரையாக வடிவதை அவதானித்தாள; கண்ட சுகுணம் தானும கலங்கியவளாய் "ஏன கலங்குகின்றீர்! நாங்கள் உமக்குச் செய்த தவறென்ன! உமக்கு நான ஏதும உதவி செய்ய வேண்டுமா? வேண்டுமானால் கூசாமற் சொல்லும் இயன்ற உதவி செய்கிறேன்; உம்மைப்பற்றி என்னுடைய அவருக்கு நல்ல எண்ணமிருக்கிறது; நான் சொல்லாமல அவரே உமக்கு ஆகவேண்டிய சகாயஞ் செய்வார்; அவரை உமது

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஸ்ரீ. இராமதாசரின் மணிவிழா

## நவீன நாஸ்திக உலகுக்கு இறைவனின் திருநாம மகிமையை வாழ்க்கைமூலம் வற்புறுத்தும் பெரியார்

### அவரது ஆனந்தாச்சிரமத்தின் அருந்தொண்டு

[க. இராமச்சந்திரன்]

"பாரதா! யான்பிறப்பற்றேனெனினும், அழிவற்றேனெனினும், உயிர்களுக்கெல்லாம் ஈசனேயெனினும், எப்போது உலகில் தர்மம் அழிந்து அதர்மம் எழுச்சி பெறுமோ அப்போது அறத்தை மறுபடியும் நிலைநிறுத்துவதற்காக, என் மாயாசக்தியால் என்னைப் பிறப்பித்துக் கொள்கிறேன்" (கீதை: IV, 6—8) எனப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் குருக்ஷேத்திரத்தில் அர்ச்சுனனுக்கு கிருஷ்ண பரமாத்மா உரைத்தவார்த்தை ஒருகாலும் பொய்த்ததில்லை. சரித்திர ஆராய்ச்சியுடன் ஒத்துப் பார்த்தால் உண்மை நன்கு விளங்கும்.

ஒவ்வொரு உலக நெருக்கடியினும் அதனைச் சீராக்கக் கூடிய தர்மவீரர்களின் கூட்டம் தோன்றியே உள்ளது. ஆத்மீக வாழ்வையே தனது நாகரிகத்தின் அடிப்படையாகக் கொண்ட காரணத்தினால், இக்குழுனர் உலகுக்களித்து அதின் குருபீடத்தமரும் தனிப் பெருமை, அன்றும் இன்றும் என்றும் புனித கண்டமாகிய பாரத நாட்டிற்கே உரியது. புத்தர், சங்கரர், ராமானுஜர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், நானக்கு தேவர், சைதன்யர், துளசிதாசர், சமர்த்த ராமதாசர் முதலானோர் அவ்வித நெருக்கடியில் தோன்றினவர்களே. நாமும் இன்று உலக சரித்திரத்தில் முன்னெக் கண்டிராத ஓர் பெரும் நெருக்கடியிலேயே வாழ்கின்றோம். ஒருக்காலும் அசைக்க முடியாத அரும் விஷயங்கள் மேல் மட்டத்திற்கு வந்து வெளிப்படுவதற்காகவே தற்போதைய உலகின் எல்லாப் பொருள்களும் அசைக்கப்படுகின்றன. "ஆகாயங் குண்டே வெல்லும்" என்று கத்திக் கொண்டு ஐரோப்பிய நாகரிகம் தற்கொலை செய்யும் இவ்வேளையில், 'தத்வமஸி' என்ற பாரத மந்திரம் உண்மை செவியுடையோர் மூளையில் தட்டாமல் இருக்கமுடியாது.

இன்றைய பாரமார்த்திக விண்ணின்கண்ணே, ஞான முகட்டில் பகவான் ரமணமூர்த்தியும், பூரண யோக பீடத்தில் பகவான் அரவிந்தரும், நிஷ்காமிய கர்மவட்டத்தில் மகாத்மாஜியும் மூன்று சூரியர்களாக அமர்ந்து உலகெங்கும் ஒளி வீசிக் கொண்டிருப்பது போலவே, சுவாமி இராமதாசர் அந்த விண்ணின் பக்தி மண்டலத்திலிருந்து உலகின் நாற்றிசையிலும் தமது அன்புக் கதிரைப் பரப்பிக் கொண்டிருக்கிறார். அவரது பக்திப் பிரவாகம் மத்திய கன்னடத்தில் தோன்றிக் காவேரி ஆற்றின் புதுவெள்ளம் போல், வடசஷ்மீரம் வரைக்கும் பரவி உயிர்களை வளர்க்கின்றது. சென்ற மாதத்துடன் அவருக்கு அறுபது ஆண்டு முடிவடைந்தபடியால் அவரது மணிவிழா சென்ற வாரத்தில் இந்தியாவின் பல இடங்களில் அவரது பக்த கோடிகளாற் கொண்டாடப்பட்டது. இவ்விழாவை முன்னிட்டு வம்பாய் தொண்டர்கள் சுவாமிகளின் ஆனந்தாச்சிரமத் தொண்டிற்கென ஒரு லட்சம் ரூபாய் சேர்த்துக் கொடுக்க முன்வந்துள்ளனர். இக்கட்டுரையில் சுவாமிகளின் அருந்தொண்டையும் உபதேசத்தையும் சிறிது ஆராய்வாம்.

இப்பெரியார் பிறந்தது 10-4-1884 க்குச் சரியான சுபானு வருஷம் பங்குனி மாசம் 30-ந் தேதி வியாழக்கிழமை சித்திரை நட்சத்திரத்தில், அவரது ஜென்ம லக்கினம் அவர்க்குப் பின் வாழ்வில் உபாசனாமூர்த்தியாக அமைந்த ஸ்ரீராமபிரான் அவதரித்த கடக லக்கினம் அவருக்குப் போலவே இவருக்கும் உதயத்தில் ஞானக் கோளாகிய வியாழன் உச்சம் பெற்றிருந்தது. அத்துடன் அன்று பூரணையும் அநுமான் ஜயந்தியும் பொருந்தியிருந்தன. தூய மனத்துடனும் நேய உளத்தினுடனும் பகவானின் திருநாமத்தை ஓயாது செபித்தலே இக்கலியுகத்தில் ஆத்மானுபூதி யெய்துதற்கு மிகவும் லேசான மார்க்கமென்பதை, நம்பிக்கையின்மையும், யுக்திதுப்பமும், நாஸ்திக மனப்பான்மையும் பரவியுள்ள இவ்விருபதாம் நூற்றாண்டில் உபதேசிக்கவும், அதின் மங்கா உண்மையைத் தமது சொந்த வாழ்விலேயே பிரத்தியட்சமாக எடுத்துக் காட்டவும் அவதரித்த இப்புண்ணிய புருஷன் அநுமான் ஜயந்தியன்று தோன்றியது மிகவும் பொருத்த முடைத்தே.

ஸ்ரீராமபிரானின் பட்டாபிஷேக வைபவத்தன்று யாவர்க்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. அஞ்சனேயருக்கு மாத்திரம் ஒன்றுங் கொடுக்கப்படவில்லை. அதைக் கவனித்த சீதாபிராட்டியார் பரமோபகாரியாயிருந்த அஞ்சனைச் செல்வனுக்கு யாதும் கொடாதமைக்குக் காரணம் என்னவெனப் பத்தாவிடம் வினவினர். ஐயன் "ஜானகி, அவனுக்கு ஏதாவது வெகுமதி நீயே கொடுத்து மகிழ வில்லையா" என்றனர். உடனே பிராட்டியார் தமது முத்துமாலையைக் கழற்றி மாருதிக் கணித்தனர். மாருதி அந்த மாலையிலுள்ள முத்துக்களையெல்லாம் ஒவ்வொன்றாய் வாயிலிட்டு மென்று உமிழ்ந்தனர். அதைப் பார்த்த பிராட்டியார் தம்மை அநுமான் அவமதித்ததாகவும் தன்குலத்துக்குரிய குணத்தையே காட்டிவிட்டதாகவும் எண்ணி வெறுப்புற்று பத்தாமுகம் நோக்கினர். சீதையின் உணர்ச்சியைக் குறிப்பாலறிந்த தசரதகுமாரன் "தேவி, அதை நீயே அநுமானிடம் கேட்டறி" எனப் பணித்தனர். அப்படியே தேவியும் மாருதியை நோக்கி, "நான் நன்றியுடனும் அன்புடனும் அளித்த முத்துமாலைக்கு ஏன் அவமதிப்புக் காட்டினாய்?" என்று விசாரிக்க, மாருதி பணிவுடன், "தாயே! தாங்கள் கருதியபடி யான் அவமதித்திலேன்; அம்முத்துமணிகளில் 'ராம' ரசம் இருக்கிறதோ வென்று சுவைத்துப் பார்த்தேன்; இல்லாததால் உமிழ்ந்தேன்" என்று அன்னை நாணித்தலை குனியும்படி பதில் இறுத்தார். சீதாபிராட்டியார் கண்டனுபவிக்காத ராமநாம ரஸ்வியாசத்தை அநுமான் அநுபவித்துப் பெருமையடைந்ததினாலன்றோ அவருக்கு வைஷ்ணவ உலகம் அடியார்களில் இளவரசு" (Prince of devotees) என்ற பட்டஞ் சூட்டி சிறியதிருவடி யென இன்றும் போற்றுகின்றது.

சுவாமி இராமதாசரின் தந்தையார், பாலகிருஷ்ணராவ், அன்பும் அருளும் சமதிருஷ்டியும் பொருந்திய பாமடக்தர். அவரே பின்னர் தமது அருமை மைந்தனுக்கு மந்திரோபதேசஞ் செய்து குருவாக வழிபடப்பட்டவருமாவர். தாயார் லலிதாபாய் ஈகையும் இரக்கமும் நிறைந்த உளத்தினர்; பத்தாவுக்கேற்ற பதிவிரதை. இவ்விரு பரிசுத்த ஆத்மாக்கள் ... இய நல்லி ... பிய ...

யில் கிருஷ்ண பஜனையும், விருந்தோம்பலும் நித்திய சம்பவங்களாய் இருந்தன. தங்கள் குழந்தைக்கு அவர்களின் குலதெய்வமான பாண்டுரங்கனின் திருநாமங்களில் ஒன்றான விட்டல் என்ற பெயரை இட்டனர். சிறுபிராயத்தில் விட்டலின் கவனம் பெரிதும் விளையாட்டிலேயே சென்றது. பள்ளிக்கூட வாழ்வில் ஒரு சோதனையிலுஞ் சித்தி பெறாது ஆசிரியர்களின் அன்பு காரணமாக மறிகுலேஷன் வரைக்கும் வகுப்பேறறப்பட்டதொன்றையே முக்கிய சம்பவமாகக் குறிப்பிடலாம். அதைவிட, மாணவர்கள் சேர்ந்து நாடகங்கள் நடித்தபோது சமர்த்த இராமதாசரின (சிவாஜி மகாராசாவின் குரு) நாடகத்தில் விட்டல் சுவாமி இராமதாசராகத் தோன்றியது அவரது பிற்கால பாரமார்த்திக வாழ்வுக்கு அடிகோலியதெனச் சொல்லலாம்.

விட்டல்ராவுக்குச் சித்திரம் வரைவதில் திறமை யிருந்திருந்ததால், சென்னைச் சித்திரக்கலாசாலையில் சில காலங்கற்றார். பின்னர் வம்பாய் கைத்தொழில் பாடசாலையில் நெசவுத் தொழில் பயின்றார். அது அவருக்குப் பிடிக்கவேயில்லை. அங்கு கழிந்த மூன்று ஆண்டுகளைப் பெரிதும் தத்துவசாஸ்திர ஆராய்ச்சியிலேயே செலவிட்டார். இக்காலத்தில்தான் வேதாந்தச் சிங்கங்களாம் சுவாமி இராமதீர்த்தரும் சுவாமி விவேகானந்தரும் உபந்நியாசங்களும், கட்டுரைகளும் கவிதைகளும் உலகில் ஓர் புது உணர்ச்சியைக் கிளப்பின. இராமதீர்த்தரின் ராமநாமப் பாடல்கள் விட்டல்ராவின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. விவேகானந்தர் பாரத நாட்டின் பழைய பெருமையையும், புராண மகிமையையும், வீழ்ச்சிக்கான காரணங்களையும், வருங்கால உயர்ச்சிக்குரிய வழிவகைகளையுங் குறித்து வற்புறுத்திக் கூறிய ஆர்வமொழிகள் விட்டல்ராவின் இளமனதில் பசுமரத்தாணி போற் பதிந்தன. இவ்விரு கேசரிகள் போல் தானும் புனித தாயாம் பாரதமாதாவின் மகிமைக்காக வாழ்ந்தாலோ வெனக் கனவு கண்டார். மூன்றாண்டுப் பயிற்சி முடிந்ததும், உத்தியோகங் கிடைத்தது. பெற்றோர் வற்புறுத்தலுக்காக ருக்மாபாய் என்னும் பெண்ணைத் திருமணஞ் செய்து, ராமபாய் என்னும் ஓர் புத்திரிக்குப் பிதாவுமானார். பதினைந்து ஆண்டுகள் உத்தியோகம் பார்த்து, அந்த அடிமை வாழ்வில் அருவருப்படைந்தார். காந்தியம் காட்டுத் தீப்போல பரவிய அக்காலத்தில் இவர் தொழிலாளர்கள்மீது காட்டிய தயவாலும் அநுதாபத்தாலும் நெசவுச்சாலைச் சொந்தக்காரர்களாலும் தனது மேலதிகாரிகளாலும் சினத்திற்காளாகிப் பலவித கஷ்டப்பட்டார். காந்தியடிகளின் நிஷ்காமிய கர்மயோக வாழ்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# பண்டைத்தமிழரின் சமயம்

(திருமயிலை திருவாளர் சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

(முற்றொடர்)

### உயிர்கள்

"உன்னையறி" என்பது ஆப்த வாக்கியம். உயிர்களைப்பற்றிய தத்துவ ஆராய்ச்சி அவசியம் செய்ய வேண்டியது. அவ்வறிவே அவ்வுயிர்களுக்கு முத்தியளிக்கத் தக்கது. நமது தேகக்கூற்றை இன்னதென்றறியாது ஓர் வைத்தியன் நோய் தீர்க்க முயல்வதை யொக்கும். உயிரின் தன்மையை அறியாது முத்தியைப் பெற ஆசைப்படுவதாம். வைத்திய சாத்திரம் நமது தேகத்திற்கு உதவுவதுபோல சமயம் நமது உயிருக்கு உதவுகின்றது. தமிழர்களின் சமயம் உயிர்களின் தன்மையை மிக விரிவாக எடுத்துக் கூறுகின்றது. பிற சமயங்களோ மிகச் சுருக்கமாகவே கூறுகிற்கும். பௌத்தம் முதலிய சில சமயங்கள் உயிர்கள் உண்டோ இல்லையோ என்று கூட ஆராய்வதில்லை. உயிர்களில்லாமற் போனால் முத்தியென்பதொன்றில்லை. உயிர்களின் தன்மையை யாம் அறியாவிட்டால் நமக்கு முத்தியிப்பதில்லை.

தமிழர்களின் சமயப்படி உயிர்கள் அறிவிற் சிறந்தவையே. ஆனால் அவ்வறிவு சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையது. இதனாலேயே சித்தாந்த சாத்திரத்தில் உயிரைப் பளிங்கிற்கு உவமை கூறுவது. இத்தன்மை தற்கால சாத்திர விற்பன்னர்களுக்கு ஒப்பமுடிந்த கொள்கையேயாம். மனிதன் தன்னுடைய இனத்தால் மாற்றமடைவதை நாம் காண்கின்றோம். மிருகங்களும் சேர்க்கையால் மாறுவது அனுபவக் காட்சி. அமெரிக்கா தேசத்தில் வெளியான ஓர் புத்தகத்தில் பின் வருமாறு கூறியிருப்பதை நோக்குவோமாக:-

"நாம் எதைப்பற்றிப் படிக்கின்றோமோ அல்லது எதனோடு நெருங்கிப் பழகுகின்றோமோ அவ்வவையாக யாம் தப்பாது மாறுவோம். நாம் எவரோடு அதிகமாக நெருங்கி வசிக்கின்றோமோ அவர்களுடைய முகச்சாயலையும், குரலையும் பேச்சையும் பெறுகின்றோம். ஓர் குழந்தை தன்னுடைய சொந்தத் தாயைப் போலிராது தனது செவிலித்தாயைப் போல் இருப்பதையும் காணலாம்"

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகு மறிவு"

என்பது திருக்குறள். மனிதன் தான்சேரும் இனத்தின்படி ஆகின்றானென்பது இத் திருக்குறளின் திரண்ட கருத்தாகும்.

உயிரானது மலத் தொடர்புள்ள போது மலமாகவும் கடவுள் சந்நிதானத்தை யடைந்தபோது அவர் உருவமாகவும் மாறுகின்றது. உயிர்களைக் கடவுளின் சந்நிதானத்திற்கு ஈர்த்துச் செல்லும் உபாயமே முத்திக்கு வழிகாட்டியாம். உயிர், கடவுள் சந்நிதானத்தை அடைந்தபோது அவருடைய திருவருள் அதனமேல் பிரகாசிக்கின்றது எதுபோலெனில் பளிங்கின்மீது சூரிய வெளிச்சம் படுவதுபோல். அப்போது உயிரானது திருவருளில் மூழ்கித் திளைக்கின்றது. இவ்வனுபவத்தில் மலமும் அதனால் உண்டாகும் கெடுதிகளும் மறைவுற்றுக் கிடக்கின்றன. இதுவே சித்தாந்த சாத்திரங்கூறும் அத்துவித நிலையாம். உயிர்கள் தங்கள மலக்கட்டுகளுக்கு ஏற்ப மூன்றுவகைப்படும், இம் மலங்களாவன:- ஆணவம், மாயை, கன்மம். ஆணவத்தால் மாத்திரம் பீடிக்கப்பட்ட உயிர்கள் விஞ்ஞானகலாவர். ஆணவத்தாலும் மாயையாலும் பந்திக்கப்பட்ட உயிர்கள் பிரளயாகலராம். மூன்று மலத்தாலும் பந்திக்கப்பட்ட உயிர்களுக்குச் சகலரென்று பெயர். பிரகிருதி மாயைப் புவனமாகிய நமது உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் சகலரே. பிரமா, விஷ்ணு முதலிய தேவர்களும், தாவர பொருள்களும் இவ்வண்டத்தைச் சேர்ந்தவையே. உயிர்கள் எழுவகைப்படுவன:- (1) தேவர் (2) மனிதர் (3) மிருகம் (4) பறவை (5) ஊர்வன (6) நீர்வாழ்வன (7) தாவரம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் இயற்றப்பெற்ற நாடகங்கள்

VII

[வெள்ளவத்தை மு. இராமலிங்கம் எழுவது]

இந்திரகுமாரநாடகம்:—இந் நாடகம் உடுப்பிட்டியைச் சேர்ந்த வல்லிபட்டிக் குறிச்சியிலே பெரிய சந்திரசேகர மாப்பாண முதலியார் மரபிலே பிறந்தவரும் குலத்தாலும் நலத்தாலும் குணத்தாலும் விவேகத்தாலும் சிறந்தவருமாகிய கதிர்காம பூபதி முதலியாரவர்களின் புத்திரனாகிய குமாரசாமி முதலியாரவர்களாலியற்றப்பெற்றது. இவரது சீவிய சரிதம் பாவலர் சரித்திர தீபகத்தில் முதன்முதலில் எழுதப்பட்டது. அதன்பின்னர் எம்மால் 16-8-36-ல் வெளிவந்த ஈழகேசரியிலும் 1939ம் ஆண்டு யூலாய் மாசம் வெளிவந்த யாழ்ப்பாணக் கல்லூரிப் பத்திரிகையிலும் விரிவாக எழுதப்பட்டது. இவரது புத்திரர் காலஞ்சென்ற ஊர்காவற்றுறை நீதவான் உவைமன் கதிரைவேற்பிள்ளையவர்களின் சரித்திரம் நண்பர் வெள்ளவத்தை குல. சபாநாதன் அவர்களால இன்னும் விரிவாக ஈழகேசரியில எழுதப்பட்டது. இவரது பௌத்திரர் சட்டநூல்களை ஆக்கும் பெரியார் ஒரு காலம் சட்டநிரூபணசபைச் சிங்கம் கௌரவ திரு. க. பாலசிங்கம் அவர்களைத் தெரியாதார் இல்லையெனலாம். ஆகவே இக்குடும்பத்தினரின் சரித்திரத்தை மீண்டும் இங்கு எழுதுதல் மிகையெனவிடுத்தனம்.

பஞ்சபாண்டவருள் நடுப்பிறந்தோனாகிய அருச்சுனன் தீர்த்தயாத்திரைக்குச் சென்றபோது கிருஷ்ணரின் சகோதரியாகிய சுபத்திரையை மணம் முடித்தகதையே இந்நாடகமாகும். இனிமேல் இந்நாடகத்திலுள்ள நலங்களை இரண்டொன்றை ஆராய்வாம்.

சுபத்திரையும் தோழியரும் பூங்காவில் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். தீர்த்தங்களாடிச் சிவதலங்கள் யாவும் தெரிசித்துப் பின் துவாரகையில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியையுங்கண்டு வருவோமெனப் புறப்பட்ட அருச்சுனனும் அவன் தோழன் அசுவத்தாமனும் காத்திரப் பிரகாரமாக இவர்கள் விளையாடும் பூங்காவனத்துக்கு வந்து சேர்கிறார்கள். அருச்சுனனைக் கண்ட சுபத்திரைக்கு அவன் யாரோ என ஐயமேற்படுகிறது. பின் தாதியரை நோக்கி,

> மன்றுமீசனோ மாலோ விண்மன்
> மதனோ
> குன்றமெறிந்த குமார வேளோ வ
> றியேன்
> மன்றல் கமழ் பூங்காமருங்காக
> வைகுமிவர்
> தன் திறத்தைப் பார்க்கிற் சயந்த
> னோ தாதியரே

என்று வினவுகிறாள். (இவ்விடத்தில "முன்னேவந்தெதிர் தோன்றும் முருகனோ தன்னேரில மாரனோ" என்ற பெரியபுராணச் செய்யுளை நினைவு கூருங்கள்) தாதியரும் ஆராய்ந்து யோசித்துவிட்டு இது வேறொருவரல்ல" "விண்ணகத்தும் மண்ணகத்து வேந்தரிவர் போலவில்லை அண்ணல் அருச்சுனன் என்று எண்ணலாம் பெண்ணரசே" என விடை கூறுகின்றார்கள்.

> மன்னனமேல் மையல்செல்ல மட
> மயிலகாணி மெல்ல
> அன்னம்போல் நடந்துசெல்ல
> அரிவையர் புறத்திறபுல்ல
> பன்மதன பசுமியாய பனிக்க
> வோய மன்னன்
> தன்வசமழியமோகம தலைக்கொ
> ண்டான கலக்குண்டானே.

மோகந் தலைக்கொண்டு கலக்குண்ட அருச்சுனனுக்கும இவள் யாராயிருக்கக்கூடுமென்ற ஐயமெழுகின்றது. தனக்குள் பல கேள்விகளை நிகழ்த்துகிறான். அவைகளுட் சில வருமாறு:-

> தண்ணார் மதிமுகமோ கைத்தரு
> வுமம்பகமோ
> பண்ணார் மொழியோ பகர்மொ
> ழியிற் றண்ணளியோ
> மண்ணோ விண்ணோ கடலில் வந்
> துதித்த பூந்திருவோ
> பெண்ணுளிவளழகு பேருலகிற்
> கண்டதுண்டோ

அவளை அருகிற் சென்று பார்க்கலாமென்றாலோ அவள் தன் அரண்மனைக்கேகிவிட்டாள். ஆகவே அவள் அருகில் என்றும் இருக்கும் பாக்கியம் பெற்ற அவள் ஆடை ஆபரணங்கள்மீது அருச்சுனனுக்கு ஆத்திரம் பிறக்கிறது.

> சாந்தசுகந்தமதாய்த் தங்கவர்ணக்
> குங்குமமாய்
> ஏந்து முலைகட்டுகச்சாய் இட்ட
> முகத்துத் தழுவடமாய்
> பாந்தளல்குல் தோய்ந்த மலர்ப
> பட்டாடையிலட்கு
> வாய்த்திடு பூஷணமாக மாதவஞ்
> செய்தேனிலையே.
>
> பாடகமாய்ச் சீறடியைப்பற்றி
> யொளிர் கிண்கிணியாய்
> வாடுமிடை சூடு மணிமேகலை
> தானாய்
> சூடகமா நன்னுதலிற் சுட்டியா
> ய்த் தோகை நிதநஞ்
> சூடுமுல்லை மல்லிகையாய்த்
> தோய்த்திடப் பெற்றேனிலையே
> சஞ்சமுகைபை! மதக்காட்டா
> னைக் கோட்டைவென்ற
> புஞ்சமுலை நெஞ்சமழுந்தப் பேரம
> ளிமேற்புரண்டே
> அஞ்சனமேற் கண்ணுடனங்கமெ
> ங்குந் தோய்வதற்குப்
> பஞ்சவர்ணத் தூங்கு மஞ்சப்பஞ்
> சணையானேனிலையே.

என்று பிலாபிக்கிறான். இந்நிலைமையில மண்ணுலகத்திலும விண்ணிலகத்திலும பெண்பொருட்டினுல் உலைந்து சுடர்விட்டிற் பூச்சி போலான சரிதைகளை அவன் நண்பன் அசுவத்தாமன் எடுத்துரைக்கிறான். அவை அருச்சுனன் காதில விழுந்தாலல்லவோ!

> பூங்காவில் வந்தஇளம் பூவையை
> கற்பூங்கிளியை
> மாங்குயிலைத் தேனை மரகத
> சிரோமணியை
> வீங்குமுலைப் பெண்ணரசை விட்
> டுவரச் சொன்ன சொல்லுப்
> பாங்கனே நீயொழியப் பாரிலெவர்
> சொல்வாரே

என்று சொல்லிவிட்டு அவள் போனவழியைப் பின்பற்றுகிறான். இந்நிலையில் அசுவத்தாமனால் யாது செய்யமுடியும். அவனும அருச்சுனனைப் பின்பற்றுகிறான்.

> மந்தர முலையாரோடு மருந்தினு
> மினிய சொல்லாள்
> பந்தடி பயிலும்போது பார்த்த
> னும் பரித்தாமாவும்
> வந்தனர் வீதிபோந்தார் மடவ
> ரல் காண்டலோடும்
> மூந்துகண்டவரோ வெனமுள
> மோகித்தாள் சோகித்தாளே

இந்நிலையில் ஓர்புறத்தில சுபத்திரை "பந்துமுலைப் பாவையரே—நாங்கள் பந்தடிக்குஞ் சந்நிதியில், இந்தவழி போந்தனர் காண் - இவர் யாவர்சொல்லும் பூவையரே" என்று தன் தாதியரை வினவுகிறாள். மறுபுறத்தில் அருச்சுனன "முந்தமலர்ச் சோலைதனனில் வந்தவளு நிந்த மடவாளோ-இப்போ, பந்துமுலைப் பெண்களோடு பந்தடித்திசைந்து நடந்தாளே" எனத தன் தோழனை வினவுகின்றான். இங்கு இடையனிலும் கண்டது ஒரு பெண்ணைத் தான எனத தெரிந்துகொண்டதும அருச்சுனன்

> நல்லாளைப் பூங்குழலல்லாளைத்
> தெதித்த கலலமிர்தச்
> சொல்லாளைக காமசுவையார
> மிதைத் துணைமுலைநேர்
> வலலாளை மாமனக்கல்லாளைக்
> கோடிவளைபுருவ
> வில்லாளை யில்லையெனு மிடை
> யாளை விடலரிதே

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# "ஐந்தெழுத்தும் அடியாரும்"

[ஆசிரியர் திரு. சி. செல்லத்துரை அவர்கள், தெல்லிப்பழை]

( முற்றொடர் )

வேதநெறி தழைத்தோங்கவும், சைவத்துறைகள் விளங்கவும், பூதபரம்பரை பொலியவும், புனிதவாய் மலர்ந்தழுத சீர்காழி வள்ளலாந் திருஞான சம்பந்த மூர்த்திகள் தமது இடத்தினின்றும் புறப்பட்டுத் தேன்மலர்களையும், முத்துக்களையுஞ் சிந்தும் காவிரியையும், வண்டுகள் களியாடப் பெண்கள் படிந்தாடும் மணிநீர் வாவிகளையும் உடைய திருவோலக்காவை அடைந்தனர். ஆங்குத் தேவர்பிரான் திருவடிகளை வணங்க நினைந்தனர்; வேதத்தின் தலைசிறந்த பொருளாயும், மதியினையும், அரவினையும், விடத்தினையும பூண்டவராயும் விளங்கிய பெருமானைமீது, "மடையில வாளை பாய" என்னும பாடலைக் கையினுற் றாளம இட்டுப் பாடினர். சிறுபிள்ளையாகிய அவருடையகைத் தாமரைகள் நோவுறுமல்லவா. தயா பரனுகிய எம்பெருமான் கருணை கூர்ந்து,

"... அஞ்செழுத்தும் எழுதிய பொற்றாளங்கள், வையமெலாம் உய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து" அளித்தனர். சிவநாமம் ஐந்தெழுத்தும் பொறிக்கப்பட்டிருந்தலைப பிள்ளையார் கண்டனர். இறைவனை நேரே கண்டவர்போலவும, அவனருள் பூத்தமை போலவும் தோன்றவே சுரமிசைக்கொண்டு அகம் மகிழ்வுற்றனர். கண்டபொழுது ஐந்தெழுத்தாலுண்டாம மகிழ்ச்சி இதுவென்ன கேட்டலாலும சொல்லலாலும் அவைதான உளவாகா.

"கருவரைப்பிற் புகாதவர் கை தொழும-திருவரத்துறை" செல்ல விரும்பியசம்பந்தர் அவ்விடநோக்கி நடந்தனர். செல்லும் பொழுது, உலக ஆசைகள அற்றவராயினும் கடவுள்பால ஆசை பூண்டவராதலின இடையறாது ஈசனைத் துதித்தவாறே ஏகினர். அவருடன் சென்றவரும் வழிநடந்த இளைப்பினுல வருந்தமுற்று மாறன்பாடி என்னும இடத்தை அடைந்தனர், இடருறினுந் தளர்வுறினுந் தடையிலாது அருளபுரிந்து காக்கும் திருவைந்தெழுத்தை ஓதியவாறே அடிகளும ஆங்கு அடைந்தனர். ஐந்தெழுத்தின அருட்சக்தி அவர்கள் அனைவரதும அயர்ச்சியைச் சூரியனைக் கண்ட பனிபோல அகலச் செய்தது. அன்றியும், அச்சத்துக்கு எதிர் நிற்க இயலாத சூரியனும் அவர்களுக்கு வெம்மை இழைத்தமைக்குப் பயந்து மேற்றிசைக்கடலில் வீழ்ந்தனன்.

சிறுகுழந்தையாக இருந்தும் துன்பத்தை நோக்காது தம்மை வணங்குமாறு "அரத்துறை"யை அடைந்த "வைதிகமணியாம சம்பந்தப்பிள்ளை மீது இறைவன் திருவுளம் பற்றினர். ஆங்குள்ள மறையவர்க்குக் கனவின்கட் காட்சியளித்து நம்பிடம் ஞானசம்பந்தன் வருகின்றான்; அவனுக்கு முத்துச்சிவிகை, மணிக்குடை, முத்துச்சின்னம் என்பவற்றைக் கொடுங்கள் எனக்கூறி மறைந்தனர். பொழுதும் புலர்ந்தது. மறையவர் யாவரும் ஆலயத்தை அடைந்தனர். அரன் மொழிப்படி ஆங்கு அவைகள் இருப்பக் கண்டனர். வியந்து போற்றினர். அவற்றை எடுத்துக்கொண்டு சென்று சம்பந்தப்பெருமான்முன் வைத்து,

> "அந்தமில் சீர் அரத்துறை
> அடியார்
> தந்த பொருள் தாங்குவீர்"

என்றனர்.

கேட்ட அடிகள் இறைவன் இன்னருளை வியந்து "எந்தையீசன்" என்னும் முதலையுடைய பாடல்களைப்பாடி முத்துச் சிவிகையை வலம் வந்தனர். பூமியில வீழ்ந்து வணங்கினர். திருநீற்றின் பெருமையை வியந்தனர். உலகத்தை உய்யச் செய்வதும் உயிருக்குயிராய் நின்று இயக்க வல்லதும இறைவன் திருநாமமாகிய ஐந்தெழுத்தன்றோ? ஆதலின் அதனை ஓதி அச்சிவிகையின்மீதமர்ந்தனர்.

இவ்வாறாகப் பல தலங்களையும் வணங்கிய பிள்ளையார் மறுபடியும் தாம் பிறந்த இடமாகிய சீர்காழிப் பதியை வந்தடைந்தனர். அங்கு வைகும் நாளில் அவருக்கு உபநயனப் பருவம் எய்தியது. வைதிக முறைப்படி உபநயனச் சடங்கு நடைபெற்றதும் மறையவர்கள் அவரை நோக்கி நான்கு வேதத்திற்கும் உரிமையை உமக்களித்தோம் என்று மந்திரங்களைப் புகன்றனர். சிவஞானங் குழைத்துண்ட புகலி வேந்தருக்கு வேறு மறையவர்தாம் மந்திரங்களை ஓதுந் தகுதி வாய்ந்தவர்களா? அவர்கள் கூறியதின் பன்மடங்கு மந்திரங்களை எடுத்து ஓதினர் பிள்ளையார். மந்திரோபதேசம் செய்யப்புக்க மறையவர்கள் தாம் முன்கேட்ட மறைப்பொருள்களின் ஐயந் தீர்த்தருளுமாறுவேண்டினர். மறையவர் மயக்கம் நீங்க விடையளித்துச்சகல மந்திரங்களுக்கும் 'வித்து' ஐந்தெழுத்தே என்றும அதன சக்தி அளவிடற்கரிது என்றும விளக்கினர். அதன் சக்தியைக்காட்டத "துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்" என்னும்திருப்பதிகத்தைப்பாடி இறுதியில 'வேதியாகு—அந்தியுண் மந்திரம் ஐந்தெழுத்துமே' எனக் கூறியருளினர். பின்னர்,

பாண்டிநாடுசென்று அமணருடன் வாதுபுரிந்து அரசனையும், சைத்தத்தையும் ஈடேறச் செய்தனர். புண்ணியவள்ளவாய் வந்த புனித சம்பந்தர்க்கு மணவினைபுரிய விரும்பினர் மறையவர்கள்.

"மாதவக் கொழுந்தனையார்" மணமிசைந்திலர். எனினும் மறை வாழவும், அந்தணர் வாய்மை ஒழுக்கம் பெருகுந்துறை வாழவும் ஒருவாறு இசைந்தனர். அழகினுக்கு அணியாக விளங்கும் வெண்ணீறும், ஐந்தெழுத்தும் பூண்டு சிவிகையேறிக் "நல்லூர்ப் பெருமணம" அடைந்தனர். யாவரும் அவர் திருமணங் காண அவ்விடத்தை அடைந்தனர். அடைந்ததும, பிள்ளையார் "ஞானமெய்ந் நெறிதான யாவர்க்கும நமச்சிவாயச் சொலாம என்ற சீர்நமச்சிவாயத் திருப்பதிகத்தை அங்கணவானமும் நிலனுங் கேட்க" அருளபுரிந்து, "இம்மணத்தில வந்தோர் ஈனமாம் பிறவிதீர யாவரும் புகுக" என்று கூறினர். அவ்வைந்தெழுத்தன் பொருட் சக்தியானது பிறவிப்பிணியை அறுக்க வல்ல மருந்தாதலின் ஆலயத்தில் தோன்றிய சோதியுட் புகக அனைவரையும் "மருவிய பிறவி நீங்க"ச் செய்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிஸ்றர். ஆனேயின் இந்தியாப் பயணம்

இந்திய அரசாங்கப் பிரதிநிதி மிஸ்றர். எம். எஸ். ஆனே இன்று ஒருமாத விடுமுறையில் இந்தியாவிற்குப் புறப்பட்டுச் செல்லுவதாக அறியப்படுகிறது. இந்தியாவிலிருக்கையில் அவர் புதுடில்லிக்குச் சென்று இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை பற்றித் தமது சொந்த அபிப்பிராயங்கள் என்னவென்பதை இந்திய அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்லலாம். இலங்கையின் புதிய உத்தேச அரசியலமைப்புப் பிரச்னையைப்பற்றியும் அவர் இந்திய அரசாங்க அதிகாரிகளுடன் கலந்து பேசக்கூடும்.

## மௌன்ட்பேட்டன் காரியாலயம்

### புதுடில்லியிலிருந்து இலங்கைக்கு மாற்றப்பட்டிருக்கிறது

தென்கிழக்கு ஆசிய இராணுவ பீடத் தலைமைக் காரியாலயம் இலங்கையி லிருக்கிறது.

தென்கிழக்கு ஆசிய இராணுவ பீடத்தின் பிரதம நேசதேச தளகர்த்தர் அட்மிரல் லூயி மௌன்ட்பேட்டன் பிரபு அவருடைய தலைமைக்காரியாலயத்தைப் புதுடில்லியிலிருந்து இலங்கைக்கு மாற்றிக்கொண்டார்.

## ஜப்பானை எதிர்ப்பதில் இலங்கையின் பிரதான பங்கு

1-ம் பக்கத் தொடர்ச்சி

இல்லாமைபடால், ஏனைய உணவுப் பொருள்களும் குறைவாகவே நமக்குக் கிடைக்கும்.

### உணவுப் பிரச்னை

தவிர்க்க முடியாத கஷ்டங்களையெல்லாம் நாம் புன்சிரிப்போடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இலங்கையின் உணவு நிலைமை இப்போதிருப்பதைப் போன்று எப்போதுமே இவ்வளவு நெருக்கடியாக இருந்ததில்லை. அப்படியிருப்பினும் இங்கு உணவு உற்பத்திக்கான சாதனங்கள் அளவு கணக்கின்றிக் கிடைக்கக் கூடியதாயிருக்கின்றன.

அரிவி வெட்டுக்காக இராணுவத்தின் உதவியைத் தருமாறு சமீபத்தில் விவசாய மந்திரி இருமுறை என்னைக் கேட்டார். இராணுவ உதவி கொடுக்கப்பட்டது. ஒரு இடத்திற் போர்வீரர்கள் வேலை செய்யும்போது கிராமவாசிகள் கை கட்டி நின்று பார்த்திருந்தனர்.

இத்தகைய ஒரு கோரிக்கைக்கு இனிமேல் இணங்க முடியாது. வன்னி, வேலை செய்யக்கூடிய உடைய ஒவ்வொரு ஆணும் பெண்ணும் குழந்தையும் உணவு உற்பத்தியில் தங்களாலான உதவிசெய்வது அவர்களின் கடமையாகும். நெருக்கடியான காலத்தில் தங்களுடைய வேலையைத் தாங்களே செய்துகொள்ள மக்களுக்கு முடியாவிட்டால் எதிர்காலம் மிக மிக இருண்டதாகவே இருக்கும். வருந்தத்தக்க ஆக்க நிலைமை ஏற்படுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று நான் நம்புகின்றேன்.

காலஞ் செல்லச் செல்ல நேசதேச இராணுவபீடம் கைப்பற்றப்பட்ட இடங்களுக்கு முன்னேறிச் செல்லும். ஆனால், அப்போது நேசதேசப் பிரதம சேனாதிபதி இங்கிருக்கும்வரை இலங்கை உலகத்தின் கவனத்தைக் கவர்ந்திருக்கும். ஆதலின், தன்னால் எவ்வளவு உதவிசெய்ய முடியுமோ அவ்வளவும் செய்ய வேண்டியது இலங்கையின் கடமை.

றப்பர் உற்பத்தியை அதிகரித்ததுடன் நமது பாதுகாப்புகளையும் சிறந்த முறையில் வைக்கவேண்டும்.

## முஸோலினி சாவை விரும்புகிறார்

### சத்திர சிகிச்சை செய்துகொள்ள மறுப்பு

நியூயார்க் ஏப் 16—

முஸோலினி கடுமையான வருத்தமுற்றிருக்கிறாரென்று 'கொரோரி டெல்லாஜெரா' என்ற பத்திரிகையின் பேர்ணே நிருபரிடமிருந்து கிடைத்த செய்தி கூறுகிறது. அப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:- ஏகாந்தமாக இவர் இருக்க விரும்புகிறார். உலகத்தை வெறுத்து அவர் அப்போது மரணத்தை எதிர்பார்த்தும் படுக்கையில் கிடக்கிறார்.

அவர் பிழைக்கவேண்டுமென்றால் உடனே சத்திரசிகிச்சை செய்யப்படவேண்டுமென்று அறிக்கைப்பட்டதாகவும் ஆனால் முஸோலினி அதற்கு மறுத்துவிட்டு மரணத்துக்குத் தயாராயிருக்கிறாரென்றும் சொல்லப்படுகிறது.

## சண்டிருப்பாயில் வட இலங்கைச் சங்கீத சபைக் கிளை ஸ்தாபனம்

9-4-44 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணியளவில் கிளை ஸ்தாபனம் நிறுவும் நோக்கமாக ஒரு பொதுக்கூட்டம் சண்டிருப்பாய் ஆங்கில வித்தியாசாலையில் வடஇலங்கைச் சங்கீதசபைத் தலைவர் ஸ்ரீமான். V. K. நாதன் அவர்கள் தலைமையிற் கூடியது. ஸ்ரீமான், ப. முதலியார் ஜெகராசசிங்கம் அவர்களது ஆரம்ப உரையின்பின், சங்கத்தின் அவசியத்தைப்பற்றித் தலைவர்பேசியதும் மேற்படி ஸ்தாபனம் நிறுவவேண்டுமெனும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. சங்க உறுப்பினர் தெரிவு பினவருமாறு:—

தலைவர் ஸ்ரீமான் ப. மு. ஜெகராசசிங்கம், உபதலைவர் ஸ்ரீமான் கா. தில்லையம்பலம் B. A., காரியதரிசி திரு. சு. ஆறுமுகம் தனாதிகாரி திரு. பொ. நல்லையா, நிர்வாகசபை ஸ்ரீமான்கள் S. தில்லையம்பலம்; T. பொன்னம்பலம் A. E. ரத்தினசாமி; T. தில்லையம்பலம், C. சேதுகாவலர், V. வேலாயுதம், S. T. நடராசா. கூட்டம் 8 மணியளவில் முதலியார் V சரவணமுத்து அவர்களால் துதிகூறப்பட முடிவெய்தியது.

கடித—

## விஜய ரஞ்சித விருந்து

சங்கீதமணி ரஞ்சிதம் அரிய நரை அவர்களது கலாஞானம் மிளிரும் சங்கீத சாகித்யமும் அதற்கு அநுசரணையாக விளங்கும் செல்வி விஜயலட்சுமி கனகரத்தினம் அவர்களது சுதிலயங் கொழிக்கும் இன்னிசை? வயலின் கீதமும் ஒருங்கமையப்பெற்ற இவ்விஜய ரஞ்சித விருந்து இசைக்கலையின் தெய்வத் தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது எனக் கான ரஞ்சிதசபை ஆதரவில் 9-4-44ல் நடைபெற்ற இன்னிசைக்கச்சேரியினபோழ்து வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும் வடபெரும்பாக வித்துபாதரிசியுமாகிய திரு. V, K. நாதன் அவர்கள் குறிப்பிட்டார். கச்சேரி மாலை 8½ மணிக்கு ஆரம்பமாயது. ஆண் பெண் இருபாலாரும் பெருந்திரளாகச் சமூகமளித்தனர். தலைவரையும் பாடகர்களையும் திரு. ப. முதலியார் ஜெகராசசிங்கம் அவர்களும் ஸ்ரீமதி இராசலட்சுமி நல்லையா அவர்களும் வரவேற்று மாலையிட்டனர். கச்சேரி முடிவில் திரு. V. K. நாதனவர்கள் மேற்படி குறிப்பிட்டதோடு இத்தகைய பொருத்தத்தின் சிறப்பையும் எடுத்துக் காட்டினார். உரியவகையில் துதிகூறப் பட்டதும் இரவு 11 மணியளவில வர் தேமாதர கீதத்துடன் கச்சேரி இனிது நிறைவேறியது.

—கடித

## உலகம்பலவிதக் கதை

2-ம்பக்கத் தொடர்ச்சி

அண்ணனுகவும் என்னை உமது தங்கையெனவும் நினைத்து நடவும், கடவுள்கிருபையால் உனக்கு ஒருகுறையும் வரவிடமாட்டோம்" என்று பரிந்து சொன்னன்.

(வளரும்)

# அகில இலங்கைச் சைவ மகாநாடு

நிகழும் தாரண வாண்டு சித்திரைத் திங்கள் கரு, கஎ, கஅ - ம் நாட்களில் (28, 29, 30-4-44) அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபை ஆதரவில் ஒரு அகில இலங்கைச் சைவ மகாநாடு திருமயிலை சைவத் திருவாளர் சே வே. ஜம்புலிங்கம்பிள்ளை யவர்கள் தலைமையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும். அவ்வமயம் சைவாபிமானிகள் அனைவரையுஞ் சமுகமளிக்கும் வண்ணம் வேண்டிக்கொள்ளுகின்றேம்.

பெண்களுக்குப் பிரத்தியேகமான இடம் கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணம்,
தாரணஞு சித்திரைமீ எ-ந்வ.

மு. மயில்வாகனம்,
காரியதரிசி.

### நிகழ்ச்சிகள்:

**சித்திரை மாதம் கரு-ந் திகதி (28-4-44) வெள்ளிக்கிழமை**

| | |
|---|---|
| முற்பகல் | |
| 9-30—10-30 | தலைவரவர்களை வண்ணை. ஸ்ரீ நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையிலிருந்து மகாநாட்டு மண்டபத்துக்கு மேளவாத்திய சகிதமாக அழைத்துவருதல். |
| 10-30—10-45 | பூசையும் தேவாரமும். |
| 10-45—11 | வரவேற்புப்பா. |
| 11 —11-30 | வரவேற்புரை — வரவேற்புத் தலைவர் திரு. இ. சிவகுருநாதர் அவர்கள். |
| 11-30—12-30 | தலைமைப் பேருரை. |
| 12-30—12-45 | தமிழ்மறை யோதல். |
| பிற்பகல் | சொற்பொழிவுகள் |
| 3 — 3-45 | "ஆதித் தமிழனும் அவன் கண்ட அழகுத்தெய்வமும்" பண்டிதை, திருவளர் செல்வி இ. பத்மாசனி அவர்கள். |
| 3-45— 4-15 | சென்ற வருடச் சைவ மகாநாட்டு வரவேற்புத் தலைவராயிருந்தவரும், நமது தமிழ்மொழிக்கும் சைவசமயத்துக்கும் சலியாது உழைத்தவருமாகிய காலஞ்சென்ற சைவத் திருவாளர் கா. அருளம்பலம் அவர்களது ஞாபகார்த்தமான சொற்பொழிவு — திரு. இ. சிவகுருநாதர் அவர்கள். |
| 4-15— 4-30 | தமிழ்மறை யோதல். |
| 4-30— 5-15 | "கற்றதனாலாய பயனென்கொல்" 'இந்துசாதன'ப் பத்திராசிரியர் பண்டிதர், திரு. ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள். |
| 5-15— 6 | "எங்கள் சமயத்தின் தற்கால நிலை" திரு. வே. தா. சிவகுருநாதபிள்ளை அவர்கள். |
| 6 — 6-15 | தலைவர் குறிப்புரையும் பூசையும் தேவாரமும். |

**சித்திரை மாதம் கஎ-ந் திகதி (29-4-44) சனிக்கிழமை**

| | |
|---|---|
| முற்பகல் | |
| 10 —10-15 | பூசையும் தேவாரமும். |
| 10-15—11 | "பெண்களும் சமய வாழ்க்கையும்" திருவளர் செல்வி க. அருந்தவநாயகி அவர்கள். |
| 11 —11-15 | தமிழ்மறை யோதல். |
| 11-15—12 | "ஆலய வழிபாடு" திரு. ஐ. பொன்னையா அவர்கள். |
| பிற்பகல் | |
| 3 — 3-30 | கல்விப்பகுதி விசேஷ நிர்வாகசபையின் அறிக்கை சம்பந்தமான பிரேரணைகள்:<br>(1) ஒவ்வொரு மாணவனுக்குந் தகுந்த கல்வி இலவசமாய் ஊட்டப்படல் வேண்டும்.<br>(2) ஒவ்வொரு பிள்ளையுந் தன் சமயபாடங்களைத் தகுந்த முறையிற் கற்றுக்கொள்வதற்குரிய வசதிகள் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இருக்கவேண்டும்.<br>பிரேரிப்பவர்:—திரு. வி. வீரசிங்கம் B. A. அவர்கள்.<br>அநுவதிப்பவர்:—திரு. ச. ஜெயவீரசிங்கம் B. A. (Hons) அவர்கள்.<br>(3) சைவப் பள்ளிக்கூடமாயினும் அரசினரது பள்ளிக்கூடமாயினும், ஒரு மாணாக்கனுடைய வீட்டிலிருந்து இரண்டுமைலுக்குள்ளிருந்தால் அந்த மாணாக்கனைப் புறச்சமயப் பள்ளிக்கூடக்காரர் தமது பள்ளிக்கூடங்களில் சேர்க்கக்கூடாது.<br>பிரேரிப்பவர்:—திரு. க. ஐயாத்துரை அவர்கள்<br>அநுவதிப்பவர்:—பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையவர்கள் |
| 3-30— 4-15 | 'சேக்கிழாரும் மெய்ப்பாடும்" பண்டிதர் திரு. க. கி. நடராஜன் அவர்கள். |
| 4-15 — 4-30 | தமிழ்மறை யோதல். |
| 4-30— 5-15 | "எனது சமயகுரு"—தலைவர் அவர்கள். |
| 5-15— 5-30 | தலைவர் குறிப்புரையும், பூசையும் தேவாரமும். |

**சித்திரைமாதம் கஅ-ந் திகதி (30-4-44) ஞாயிற்றுக்கிழமை**

| | |
|---|---|
| முற்பகல் | |
| 10 —10-15 | பூசையும் தேவாரமும். |
| 10-15 —11 | "தசகாரிய விளக்கம்" திரு. சி. முருகேசு அவர்கள். |
| 11 —11.15 | தமிழ்மறை யோதல். |
| 11.15—12 | "இருபாவிருபஃது" திரு. சு. வே. சுப்பிரமணியம் அவர்கள். |
| பிற்பகல் | |
| 3 — 3-45 | "இறைவழிபாடு" பண்டிதை திருவளர் செல்வி த. பாலாம்பிகையம்மாள் அவர்கள். |
| 3-45— 4 | தமிழ்மறை யோதல். |
| 4 — 4-45 | "சைவசமயமும் வருங்காலமும்"—தலைவரவர்கள். |
| 4-45— 5-15 | உபந்நியாசத் தேர்தலில் திறமைபெற்ற சில மாணவர்களின் சொற்பொழிவுகள். |
| 5-15— 5-30 | சைவத் தேர்தலில் திறமைபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கல். |
| 5-30— 6 | தலைவர் முடிபுரை. |
| 6 — 6-30 | நன்றி கூறுதலும் பூசையும் தேவாரமும். |

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்"

## சைவ பரிபாலன சங்கம் வருடாந்த கூட்டம்

மேற்படி சங்கத்தின் மதினெட்டாவது வருடாந்தக் கூட்டம் 6-4-1944 வியாழக்கிழமை மாலை 6-30 மணிதொடக்கம் சங்கத் தலைவர் ஸ்ரீமாந். S. தக்ஷிணமூர்த்தி தலைமையில் சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

ஆரம்பத்தில், சென்றகூட்ட அறிக்கை வாசிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பட்டதும் இவ்வருடத்துச் சங்க உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். வவா மாகாணாதிபதி ஸ்ரீமாந் C. குமாரசுவாமி சங்கப் போஷகராகவும் ஸ்ரீமாந் S. தக்ஷிணமூர்த்தி தலைவராகவும், தரும ஆதக்கல்லூரி ஆசிரியர்கள் ஸ்ரீமான்கள் S. ஆறுமுகராசா, M. சபாநாயகம் என்போர் முறையே செயலாளராகவும் தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். பின்பு சங்கவிதிகள் திருத்தியமைக்கப்பட்டதும், 9 மணியளவிற் கூட்டம் இனிது நிறைவேறியது.

—கடித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தில் இயற்றப்பெற்ற நாடகங்கள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற முடிவுக்கு வருகிறான். அதுபோலவே மறுபுறத்தில் சுபத்திரை வெண்ணிலவையும் மன்மதனையும் தென்றலையும் விழித்து முறையே

பாற்கரனைப் பார்க்கிலு நீ வெண்ணிலாவே—பெண்களை
பாற்கொடுமை செய்கிறாயே வெண்ணிலாவே
சம்பரன் தன்னைச் சமர் வென்ற வீரன் நீ மன்மதா—ஒரு
தையலை வெல்லவில் கையிலே யெடுத்தாயோ மன்மதா
சீதப் பொதிய மலையிற் பிறந்து நீ தென்றலே—இந்தச்
செந்தழல் தன்னொடுஞ் சேர்ந்து பயின்றதேன் தென்றலே

எனவருந்துகின்றாள். இந்நிலையில் கருமமே கண்ணான அருச்சுனனுக்கு ஒரு யுக்தி பிறக்கின்றது. ஆண்டிவேஷம் போடுகிறான். ஆண்டியாய் வந்தது அருச்சுனனென அறிந்த கிருஷ்ணர் அவனை அழைத்துக்கொண்டுபோய்ப் பலபத்திரர் முன் விடுகின்றார். பலபத்திரர் ஆண்டியின் வரலாறுகள் யாவும் கேட்டறிந்தபின்பு "இங்கிருக்கு மாண்டியநுக்கேவல புரிவாய் விஜயமே, அங்கவரால் நலமாம் பெற்றுவாழுதியே" எனச் சுபத்திரைக்குக் கட்டளையிடுகிறார். இந்நூலாசிரியர் சிருங்காரச வர்ணனையில் மிகவும் கைதேர்ந்தவர்போல் தோற்றுகின்றது. இந்திர குமாரன் வல்லவனெனினும் பஞ்சபாண்டவர்களுள்ளும் ஏனைய காவிய புருஷர்களுள்ளும் மிகவுஞ் சிறந்த சிருங்கார பிரியன். அவனைப் பற்றிக் கூறும் நூல் சிறப்பாகச் சிருங்காரத்தையே கொண்டதாக இருக்கவேண்டும். இதை நினைத்துத்தானோ போலும் ஆசிரியர்,

தீங்குதலைப் பாங்கியர்காள் செய் பணிகள் செய்தொழுகக்
கோங்கமென வோங்குங் குவி முலைப்பூங் கொம்பனளுள்
தங்குசடை யோகியார் சொன்ன பணி செய்தொழுக
வாங்குநிலை யிவள் மூலைமையை வாட்டியபல பூட்டினனே,

எனக் கூறுகின்றார்.

ஆண்டியின் தோளில் விற்பிடித்த தழுண்டாய தழும்பைக்கண்ட சுபத்திரை ஐயங்கொண்டு ஆண்டியின் ஊர் எதுவென வினவ ஆண்டியும் தன்னூர் இந்திரப்பிரத்த நகரெனக் கூறுகின்றார். அடுத்தாற்போல் சுபத்திரை "அந்தப் புரத்தை யாளவதார் சொல்லும் மெய்யாய்" எனக் கேட்க ஆண்டியும் தர்மன்தான் எனக் கூறுகிறார்: உடனே சுபத்திரை "அத்தர்மவீமநகுலசகாதேவருக்கையா—பெண்ணுண்டோ, அன்னை அரோபதை தன்னருகனியென்பாரையா" எனத் தன் பின்பத்தியைக் காட்டிவிட்டாள்; உடனே அருச்சுனன்,

கள்ளிறைக்கும் பூங்கோதை சமழுங் கருங்குழலே
உள்ளங்கைத் தேனே உபாய மதனேவிடமே
வள்ளைக் குழையே மயிலே அருச்சுனனைத்
தள்ளித் தருமன் முதற்றம்பியரைக் கேட்டதென்னோ

என்று சுபத்திரையைக் குழுகே மடக்கிக் கொள்கிறான். மன்னவன் முகத்தை நோக்கி மறுமொழி சொல்லாது சுபத்திரை தன் உளம் நாணிக் காலால் தரைதனைக் கீறி நின்றாள். அன்னவள் உளத்தை யோர்ந்து அங்கு அருகுவந்த தோழி தாழ்ந்து அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் ஸ்ரீகிருஷ்ணர் விவாகம் பேசியிருந்ததை யெடுத்துக் கூறுகின்றாள்,

## சுவாமி ஸ்ரீ இராமதாசரின் மணிவிழா

3ம் பக்கத் தொடர்ச்சி

வும் அவர் ஸ்ரீமத். பகவத்கீதை குறித்து அக்காலத்தில் வரைந்த கட்டுரைகளும் பகவான் திருப்பாதத்தில் பூரண அடைக்கலம் புகுந்து அவன் கருவியாக வாழ்ந்து உலகுக்குத் தன்னுலியன்ற தொண்டு செய்ய வேண்டுமென்ற அபேட்சையைத் தூண்டின. அடிமைத் தொழிலைவிட்டு வெறுங்கையுடன் சொந்த ஊராகிய மங்களூர் சேர்ந்தார். இனசனத்தாரின் கட்டாயத்தின் பேரில் அங்கே நெசவுத் தொழிலைச் சொந்தப் பொறுப்பில் நடாத்திப் பெரும் நஷ்டப்பட்டுக் கடனாளியானார். உள்ளந் திறவை நாடியது; மனம் கடனுலுங் குடும்ப பாரத்தாலும் வாடியது. இவ்வேளையில் ஓர் நண்பர் எதிர்பாராத முறையில் முன்வந்து கடன் முழுவதையுந் தீர்த்துவிட்டார். வரும்.

## உள்நாட்டில் நெல் வாங்குந் திட்டம்

யாழ்ப்பாண டிஸ்திறிக்கில் நெல்விளைவிப்போர் அனைவரும் அறிய வேண்டியது:—

### உள்நாட்டில் நெல்வாங்குந் திட்டம்

தற்போ தடைந்திருக்கும் மாறுதல்களும், மாறுதல்கட்குரிய காரணங்களும் பிரபல்யமாகப் பிரசித்தஞ் செய்யப்பட்டிருக்கின்றன. இலகுவாக அறியும் பொருட்டு பிரதானமான குறிப்புகள் மறுபடியும் கூறப்படுகின்றன.

(A) இத்திட்டம் தற்போதைய கால போகத் தொடக்கத்திலிருந்தே, நடைமுறையில் கொண்டுவரப்படும்.

B நெல்விதைக்கப்பட்ட ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலிருந்தும் மட்டமாக 2 புசல் வீதம் அறவாக்கப்படும் வரியே, வயல் விளைச்சலின் முதலாவது வரியாகும்.

C விதைநெல், நாட்டுவழுப்ப சேவை கூலி நெல் முதலிய்வற்றிற்குரிய சகாயங்கள் முன்போலவே செய்யப்படும்.

D உணவுக் குரிய சகாயங்கள்:—கமத்தொழில் செய்வோருக்கும், அவர்களில் சாதாரணமாக தங்கியிருப்போர்கட்கும் கிழமை ஒன்றுக்கு 6 சேர்களும் கமத் தொழில் செய்யாத சொந்தக்காரருக்கும் அவர்களில் தங்கியிருப்போர்கட்கும் கிழமை ஒன்றுக்கு 4 சேர்களும் என்பதைக் குறித்துக் கொள்க. இவ்விதமாக ஒவ்வொரு நெல் விளைவிப்போனும் ஒரு போகத்தில் 50 பறைக்கு மேலதிகமாக எடுத்துக் கொள்ள முடியாது. இக்கணக்கிற்கு மேற்பட்ட எவ்வித நெல் சகாயங்களும் அரசினர்க்குரியனவாகி, அரசினரால் வாங்கிக் கொள்ளப்படும்.

2 இவற்றிற்கு மேலாக வேண்டப்படும் செய்திகளை அல்லது விபரங்களை என்னிடம் அல்லது கீழ் உத்தியோகஸ்தர்களிடம் அல்லது செய்திகள் பரவச் செய்யும் ஸ்தாபனங்கள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற் கூறப்பட்ட கணக்கின்படி மேலதிகமாக எஞ்சும் நெல்லை, கத்தம் கிராமத் தலைமைக்காரரிடம் கையழித்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளுமாறு, நெல்விளைவிப்போரின் கூட்டுறவை வேண்டுகின்றேன், பற்றுச்சீட்டுகளைப் பிரதம தலைமைக்காரரிடம் கையழித்தவுடன், அதிக கூடிய விரையில நெல்லின் பெறுமதிக்குரிய பணம் கொடுக்கப்படும்.

ஆர். எம். டேவிஸ்,
கவுண்மேந்து ஏசண்டர்,
வடமாகாணம்,

யாழ்ப்பாணம் கச்சேரி,
44-ம் ஆண்டு சித்திரைமீ 12ந் தேதி.
G 8, 20.4 44.

அருச்சுனனும் சுபத்திரையும் ஒருவரையொருவர் அறிந்த வரலாறுறையும் "சுவிருட் சாபந்தன்னில் கன்னிமாடத்திலுள்ள கதலினை மெல்லநோக்கி மின்னனுள் கணவனோடு விரைந்து தேர்மேற் கொண்ட வரலாற்றையும் அவர்கள் விவாகஞ்செய்துகொண்ட வரலாற்றையும் நூலிற்கண்டு களிக்க. இந்நாடகநூற் பிரதி யொன்றினைப் பேணி வைத்திருந்து மகிழ்வுடன் தந்துதவிய நாடகாசிரியரின் பௌத்திர சௌரவ திரு. க. பாலசிங்கம் அவர்களுக்கு நன்றி உரித்தாகுக,

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### வியாழன் ஏப்ரல் 20

காலை 7-45 சீதாரம்பம்† 7-50 தமிழில்செய்திகள் 8 மைசூர் டி சௌடையா† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8 30 எம் ஆர் துஞ்சம்மாள் பாட்டு 9 முடிவு.

1 தூரல்வகை† 1-20 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருப்பாபுலியூர் விராஜம் ஐயர் வயலின் 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 திருப்பாபுலியூர் விராஜம் அய்யர் வயலின் 5-45 இசைப்பயிற்சி 6 எம் ஆர் துஞ்சம்மாள் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திவிளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 சீர்காழி எஸ் கே சதாசிவம்பிள்ளை பாட்டு 9 மனிஷா பஞ்சகம் நாடகம் 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ரீவதேச சம்பந்த பிரகடனம் பேச்சு 10 இசைவேளை† 10-30 முடிவு.

### வெள்ளி ஏப்ரல் 21

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 வானொலி வாத்திய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஸி எஸ் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஸி எஸ் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 திருவையாறு டி வைத்தியநாதய்யர் பாட்டு 5-40 தான்ஷீப் 6 கும்பகோணம் வி சிவசுப்பிரமணிய பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கியவாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 கானகோஷ்டி நாடகம் 8 கும்பகோணம் சிவசுப்பிரமணியபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 8-45 திருவைவாது டி வைத்தியநாதய்யர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை† 10-30 முடிவு.

### சனி ஏப்ரல் 22

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 காலைகீதம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திரைகானம்† 9 முடிவு.

1 எச் எஸ் கிருஷ்ணராவ் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வசுந்தரா† 2 தமிழில் செய்திகள் 2-05 டி எஸ் வேங்கடாசலம் பிள்ளை வயலின் 2-30 முடிவு.

மாலை 5 டி எஸ் வேங்கடாசலம் பிள்ளை வயலின் 5 40 ஸ்கந்தபுராண விளக்கம் 6 எச் எஸ் கிருஷ்ணராவ் பாட்டு 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 ஜப்பானை ஆராய்வோம் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி 9-15 எம் எஸ் சுப்புலட்சுமி, சாந்தா ஆப்தே† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30லண்டனிலிருந்து செய்திகள் 9-45 தலைவியின்தூது 10 இசைவேளை† 10-30 முடிவு.

### ஞாயிறு ஏப்ரல் 23

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 கதம்பம்† 8-15 ஆங்கிலத்தில்செய்திகள் 8-30 கல்விடைக்குறிச்சி எஸ் சரஸ்வதி பாட்டு 9 முடிவு.

12 வாழ்வை நம்பாதே† 12 30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஸி ஏ நாராயணன் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2-05 இசைக் கதம்பம்† 2-30 முடிவு.

மாலை 5 ஸி ஏ நாராயணன் பாட்டு 5-30 தேவாரத்தை 6 கல்லிடைக்குறிச்சி எஸ் ஸரஸ்வதி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 நமது தபால்பெட்டி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 நிறைவில் சிக்கல் பேச்சு 8 கே வேங்கடாத்திரி பாகவதர் வீணை 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45ஆங்கிலநிகழ்ச்சி 10 இசைவேளை† 10-30 முடிவு.

### திங்கள் ஏப்ரல் 24

காலை 7-45 சீதாரம்பம்† 7-50 தமிழில்செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ் குருஸ்வாமிபிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி எஸ் கிருஷ்ணஐயங்கார் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை: 5 எஸ குருஸ்வாமி பிள்ளை நாகஸ்வரம் 5.45 இசைப்பயிற்சி 6 திருவிழந்தூர் ஏ கே கணேசபிள்ளை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15செய்திச்சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 வானொலி வாத்யகோஷ்டி 8 திருவிழந்தூர் ஏ கே கணேசபிள்ளை பாட்டு 8-45 டி எஸ் கிருஷ்ணஐயங்கார் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 புதிய இந்தியாவின் பிரச்னைகள் 10-5 இசைவேளை† 10-20 முடிவு.

## அறிவித்தல்

### யாழ்ப்பாண டிஸ்திறிக் பகுதியில் உப உணவுப்பொருட்கள் கொடுத்தல்

1944ம் ஆ ஏப்பிரில்மீ 17ந் உ திங்கட்கிழமை தொடக்கம் 23 ந் திகதி வரைக்கும் ஐக்கிய சங்கக் கடைகளல்லாத மற்றைய சில்லறை வியாபாரிகள் மூலம் அச்சில்லறை வியாபாரிகளிடம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கூப்பன்காரருக்கும் பின்வரும் உப உணவுப் பொருள்களை விற்கும்படி அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

மல்லி 1 அவுன்ஸ்.
புளி 1 அவுன்ஸ்.
மைசூர்ப்பருப்பு ½ அவுன்ஸ்.
சீரகம் ½ அவுன்ஸ்.

2 தங்களுக்குச் சேரவேண்டிய உப உணவுப்பொருட்களைக் கட்டுப்பாட்டு உணவுப்பொருட்களுடன் பெற்றுக் கொள்ளலாமென இத்தாலறிவிக்கப்படுகின்றது.

(ஒப்பம்) E. B. திசைவீரசிங்கம்
வடமாகாண ஏஜண்டுதுரை
அவர்களுக்காக

யாழ்ப்பாணம் கச்சேரி
11—4—44.
G 6 20—4—44

## தேவை

### J 479 Kalviankadu Cooperative Stores Ltd. Jaffna

கல்வியங்காடு ஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு மானேசர் தேவை. மாதம் 75 ரூபா சம்பளம் கொடுக்கப்படும். ஆனால், விற்பனவுகாரனை அவர் தமது கணக்கிலேயே வைத்துக் கொள்ளல் வேண்டும். 500 ரூபா ரொக்கப்பிணை வங்கி வட்டி கொடுபடும். விண்ணப்பங்கள் இம் மாதம் 28ந் தேதிக்கு முன் (28.4-44) காரியதரிசிக்குக் கிடைக்க வேண்டும். விண்ணப்பத்துடன் ரூபா. 10 பிரவேசப்பணமாகக் கட்டப்படல் வேண்டும். தெரிபடாவிடின் ரூபா. ஒன்பது திருப்பிக் கொடுக்கப்படும்.

V. Kumarasamy,
for Hony. Secretary.

Kalviankadu
17—4—44.
Mis 8, 20—24 4.44.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 20, April, 1944,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org